# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

ிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'A' தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

## உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா. ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

18. கா.புவனேஸ்வரி - சங்க கால உணவு முறைகள் 86
19. அ.மகபூப - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் 91
20. மகேஸ்வரி - சிறுகதை இலக்கியம் 95
21. து.விசாலாட்சி - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை 99
22. ஜெ. வினோதினி - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை 104
23. வேணுகோபால் - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் 107
24. நா.ஸ்ரீ பிரியா - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் 111
25. ஷரிமளாதேவி - காட்டுப் பூக்களின் கானங்கள் 115

# விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள்

**ர. சூர்யா,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

**முன்னுரை**

இன்றைய உலகில் பலதரப்பட்ட இலக்கியங்கள் வருகைபுரிந்து கொண்டிருந்தாலும், தற்போது இரண்டு வருட காலத்திற்கும் மேலாக விகடன் பிரசுரங்களில் தடம் என்ற இலக்கிய இதழானது மிக அழுத்தமாகத் தடம் பதித்து வருகிறது. இவ்விதழ் எண்ணற்ற சிறப்பம்சங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது. பல்வேறு சிறப்பினைப் பெற்றிருப்பினும் இத்தடம் இதழின் படைப்பாளர் மனுஷ்யபுத்திரன் வழியே பெண்கள் குறித்த பார்வைகள் பல தன்மைகள் பெற்றவையாக உள்ளன. எனவே தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் பற்றிய எண்ணங்கள் எடுத்தாழப்படும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்ணிய ஆய்வு**

பெண்களின் மன உணர்வுகளையும், அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களையும் பற்றிப் பேசுவதே பெண்ணியம் எனப்படுகிறது. பெண்ணிய ஆய்வானது சமூக அக்கறை நிறைந்துள்ள காரணத்தால் மிகச் சிறப்பாக கவிதை, கட்டுரை, சிறுகதை, தொடர்கதை போன்ற படைப்புகளின் வழியே தனது பெண்ணியம் குறித்த சிந்தனைகளை எடுத்துக்கூறும் விதமாக படைப்பாளர்களின் படைப்புகள் அமைகின்றன. அவ்வாறு அமைந்த படைப்புகள் ஏராளம் விகடன் தடம் இதழில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் இன்பம், துன்பம் என அனைத்தும் நிறைந்ததாகப் பெண்களின் வாழ்க்கைக் காட்டப்பட்டுள்ளது.

**பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்**

“ஆங்கிலத்தில் ‘Feminism’ என்று வழங்கும் கலைச் சொல்லையே தமிழில் ‘பெண்ணியம்’என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச் சொல், பெண்ணைக் குறிக்கும் ‘Femina’ என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பெண் என்னும் சொல்

பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்' என்று பொருள்படும்" (பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.9) என ச.முத்துச்சிதம்பரம் குறிப்பிடுவதின் மூலம் பெண்ணியம் குறித்த சொற்பொருள் விளக்கத்தை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் முன்பு கி.பி.1889 வரை 'Womanism' என்ற சொல் பெண்கள் குறித்த போராட்டத்திற்குப் பயன்படுத்தி, பின்பு கி.பி. 1890 ஆம் ஆண்டு 'Wonarison' என்ற சொல்லை 'Feminism' என்ற சொல் பெற்று, அதன் பின்பு கி.பி.1894 – ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது' என்பதை (பெண்ணியம் ப.11) இரா.பிரேமா குறிப்பிட்டுள்ளதன் மூலமும் அறிய முடிகிறது.

**சமூகத்தில் பெண்கள்**

பொதுவாக தமிழ்நாட்டில் பெண்கள் ஆண்களுக்கு அடிமை என்றும் ஆண்களுக்கு நிகரான உரிமை இன்னும் அளிக்கவில்லை என்றும் அனைவராலும் சொல்லப்பட்டு வருகிறது. ஆண்களுக்கு எவ்வாறு டாஸ்மாக் நிம்மதியை அளிக்கிறதோ, அதேபோல பெண்களுக்கு தொலைக்காட்சி நிம்மதி அளிக்கிறது என்பார் சிலர். மது அருந்தும் பெண்களும் உண்டு. தொலைக்காட்சி சீரியல் பார்க்கும் ஆண்களும் உண்டு. பணிக்குச் செல்லும் பெண்களும் உண்டு. வீட்டிலேயே இருந்து கொண்டு வீட்டு வெலை செய்யும் ஆண்களும் இக்காலத்தில் உண்டு. இருப்பினும் பெண்களை உலக அளவில் ஆராயும் போது முற்றிலும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மாற்றங்கள், பொதுத்தன்மை என்ற வகையிலும், பொழுது போக்கு மற்றும் சமூக சூழல்களுக்கு ஏற்ப பெண்கள் தங்களை மாற்றிக் கொண்டுதான் இருக்கிறது.

காலங்கள் மாறிக் கொண்டிருக்கிற பொழுது பெண்களின் நிலையும் முடிவதுமாக மாற வேண்டும் என்று எண்ணுவது முற்றிலும் தவறானது ஆகும். இன்னும் பல இடங்களில் பெண்கள் கூண்டுப் பறவைகளாக, அடிமைகளாக ஒடுக்கப்படும் விதத்தினைக் காணமுடிகிறது. இதனை மனுஷ்யபுத்திரனின் பார்வையில் நோக்கும் போது,

"நம்முடைய சிறுநகரங்கள், கிராமங்கள், சாதிரீதியாக, மதரீதியாகப் பெண்களை ஒடுக்குகின்றன. பெண்கள் இன்னும் கூண்டுப் பறவைகளாக நீடிக்கிற அவலத்தையே பார்க்கிறோம். அப்படிப் பார்க்கிறபோது பெண்களுக்கான பொதுவெளி இன்னும் பல தளங்களிலும் மறுக்கப்படுகிறது என்பதுதான் உண்மை" (விகடன் தடம், செப் - 2017, ப.50) இவ்வாறு குறிப்பிடுவதின் மூலம் பெண்கள் சாதி, மதம் போன்றவற்றைக் காட்டி இவ்வனைத்தின் மூலமும் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை அறியமுடிகிறது.

**குடும்பமும் பெண்ணும்**

மனிதனின் குடும்ப அமைப்பு என்பதும் ஒரு அரசாங்க அமைப்பைப் போன்றது தான். ஏனெனில் அக்குடும்பத்தில் பல்வேறு உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் மூலம் அக்குடும்பத்திலுள்ள பெண் பல்வேறு விதமான பாத்திரத்தையும் அவர்கள் மூலமாக எதிர்ப்படும் அதிகார ங்களையும் சந்திக்கிறாள். ஒரு குடும்பத்தில் புதிதாக ஒரு பெண் நுழைகிறாள் என்றால் அங்கு அவள் காணும் அனைத்தும் பதுவிதமாகவே அவளுக்குத் தோன்றும். அங்கு அவள் பணிவு, கடமை, விட்டுக் கொடுத்தல் எனப் பலவற்றில் சமரசப் போக்கோடு செல்பவளாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்தாலும் அக்குடும்பத்தில் அவள் ஓர் அந்நிய நபராகவே பார்க்கப்படுகிறாள் அல்லது அவள் தன்னைத் தானே அந்நிய நபராக நினைத்துத் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கிறாள். இவ்வாறான சூழ்நிலையில் அப்பெண் எங்கும் செல்லாமல் எந்த ஒரு பணியிலும் தனது எண்ணத்தைப் புகுத்தாமல் பல்வேறான மனப்போராட்டங்களை அவள் சந்திக்கிறாள். இதனை

'இங்குதான் பந்தங்கள், சொத்து, பணம் சார்ந்த உரிமைப் போராட்டங்கள் தொடங்குகின்றன. இது ஒரே கூண்டில் அடைக்கப்பட்ட வெவ்வேறு மிருகங்ளுடைய உணர்ச்சிப் போராட்டமாகவும், அதிகார யுத்தமாகவும் மாறுகிறது'' (தடம்.செப்-2017, ப.52) என மனுஷ்யபுத்திரன் குறிப்பிடுவதின் மூலம் மேற்கண்ட சூழ்நிலைகள் ஏற்படும் போது அப்பெண் உளவியல் ரீதியாகத் துன்பப்பட்டு மணப்போராட்டங்களைச் சந்திக்கிறாள் என்பதை நன்கு உணர முடிகிறது.

மேலும், இவ்வாறு பெண்கள் தங்களுக்குள்ளும் தனது குடும்பத்திற்குள்ளும் பிரச்சினைகளுக்கு உள்ளாவது இத்தொலைக்காட்சித் தொடர்கள், நம் குடும்ப அமைப்புகள் மூலம்தான் என்பதை, "தொலைக்காட்சித் தொடர்கள் மட்டுமல்ல, நம் குடும்ப அமைப்புகளும் மனநோயை உருவாக்கக் கூடிய கதையாடல்களைக் கொண்டிருக்கின்றன'' என (தடம்- செப் - 2017,ப.53) மனுஷ்யபுத்திரன் மிகத் தீவிரமாகத் தன்னுடைய எண்ணத்தைப் பதிவு செய்துள்ளார்.

**ஊடகங்களின் வழியே பெண்கள் பற்றிய பார்வை**

பெரும்பாலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெண்களே முதன்மை இடம் வகித்தவர்களாக உள்ளனர். தினந்தோறும் ஒளிபரப்பாகும் தொடர்களில் கூட பெண்களின் பெயரே சிறப்பிடம் பெற்றதாகவும், அத்தொடர்களில் பெண்களை முதன்மைப்படுத்திக் காட்டுவதும் மிகச் சிறப்பான முறையில் ஒளிபரப்பப்படுவதும் ஏற்கவேண்டியதாக உள்ளது. ஏனெனில் உலக வார்க்கையில் பெண் என்பவள் ஆண்களுக்குரிய அனைத்து இடங்களையும் நிரப்பியபோதும்

குடும்பத்தில் வீட்டு விலங்காக உணர்ச்சிக் களமாகவே என்றும் போராட்டத்திற்குரியவளாகவே வாழ்கிறாள். ஆனால் தொலைக்காட்சிகளில் ஆணைவிட பெண்ணே உயர்வாக நிற்கிறாள் என்பதை,

“ஒரு குடும்ப அமைப்பில் ஆண் அதிகாரமிக்கவனாக இருந்த போதிலும் கூட, தொலைக்காட்சித் தொடர்களில் அவன் மங்கலாக்கப்பட்டு, பெண்ணே அதன் உணர்ச்சிகரமான மையமாக்கப்படுகிறார்கள்” என்று (மேலது – 53) மனுஷ்யபுத்திரன் கூறுவதிலிருந்து பெண்களுக்கு நிஜத்தில்தான் பிரகாசம் இல்லை. நிழலிலாவது பிரகாசத்துடன் காட்சியளிக்கிறார்கள் என்பது உண்மையாகிறது. இதற்கு உதாரணமாக சன்.டி.வியில் ஒளிபரப்பாகும் (மகாலட்சுமி, வள்ளி, வாணி ராணி,சந்திரலேகா,கங்கா, நந்தினி, தாமரை) பல தொடர்களிலும் பெண்களை முன்வைத்தே இவ்ஊடகத்தின் மூலம் பெண்களுக்குச் சிறப்பினைத் தேடித்தருகின்றனர்.

இவைமட்டுமின்றி,விவாத நிகழ்ச்சி, மெய்மை நிகழ்ச்சி (ரியாலிட்டி ஷோ) போன்ற நிகழ்ச்சிகளிலும் கூட பெண்கள் முதலிடம் தான். லட்சுமி ராமகிருஷ்ணன் நடத்தும் ‘சொல்வதெல்லாம் உண்மை’ என்ற நிகழ்ச்சியில் உண்மை மனிதர்களையும் அவர்கள் முறையிடுதலும் குடும்பத்தின் நிகழ்வினை பகிரங்கம் செய்தல் முறை, தீர்ப்பு வழங்கும் முறை போன்றவை இந்த மெய்மை நிகழ்ச்சி (ரியாலிட்டி ஷோ) வில் காணமுழகிறது. அதே போல நீயா? நானா?என்ற விவாத நிகழ்ச்சியானது எந்தவித ஒளிவு மறைவும் இல்லாமல் பொதுவான விசயங்களில் பெண்கள் தங்களுடைய கருத்துக்களை சமுதாயத்திடம் பகிர்ந்து கொள்ள இடமளிக்கிறது. இந்நிகழ்ச்சி சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் ஏற்பதாய் உள்ளது.

சமீபத்தில் ஒளிபரப்பான ‘ பிக்பாஷ்’ நிகழ்ச்சியில் பங்கேற்றபின் தனது இல்லத்தில் இல்லாத சுதந்திரத்தை ‘பிக்பாஷ்’ இல்லத்தின் மூலம் முழுமையாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் ஓவியா. இவரை ஆண்களைவிட பெண்களுக்குப் பிடித்துப்போன காரணம் ‘தனக்கான விருப்பு, வெறுப்புகளை வெளிப்படுத்தி பிறருக்காக வாழாத ஒருவராகக் காட்டிக் கொண்டார். இப்படிப்பட்ட தன்மையே பெண்களிடம் ஓவியாவிற்கு அதிக ஈடுபாடு வரக் காரணமாக அமைந்திருந்தது என்பதை அந்நிகழ்ச்சியின் வண்ணம் நாம் அறிந்ததோடுமட்டுமல்லாமல் இதனை,

“ஓவியா தன்னுடைய விருப்பங்களையும் விருப்பமின்மைகளையும் வெளிப்படுத்துகிற பிறருடைய நிர்பந்தங்களையும், அபிப்ராயங்களையும் பொருட்படுத்தாதவராக அடையாளம் காணப்படுகிறார்” என மனுஷ்யபுத்திரன் குறிப்பிடுவதின் மூலம் பெண்கள் தங்கள் இயல்பு

வாழ்வில் காட்டமுடியாத, செயல்படுத்த முடியாதவற்றை தொலைக்காட்சிகளின் வழியே, திரையின் வழியே காட்டிக் கொள்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.

மேலும் திரையுலகமானது இன்னும் ஆண்களை முதன்மைப்படுத்தும் விதத்திலேயே செயல்படுகிறது. பெரும்பாலும் இயக்கம் அனைத்தும் ஆண்வர்க்கம் என்பதால் திரையில் தோன்றும் நாயகியான பெண் என்பவள் ஆணால் புனையப்பட்டு, அவனது மனோபாவனைகளை அவள்மீது செலுத்தி ஒரு பொய்யான வாழ்வினை வாழச் செய்கிறான். ஆகையால் திரைப்படமும் பெண்கள் குறித்த பார்வையில் இன்னும் முன்னேறிவிடவில்லை. பெண்கள் எண்ணற்ற திரைப்படங்களில் ஒரு கேளிக்கைக்கு இடமானவளாகத் தான் தோன்றுகின்றனர். இயக்குநர் கூறிய அனைத்துக் கருத்துக்களையும் தன்னுள் வைத்து உண்மைகளைப் புதைத்து அவள் செயற்கையான வாழ்வினையே திரையில் வாழ்கிறாள். பெண்கள் தங்களது வாழ்வில் ஏற்படும் பிரச்சனையின் காரணமாகத் தன்னை வெவ்வெறு விதத்தில் காட்டிக் கொள்ள முற்படுகின்றனர். தங்களுடைய ஒழுக்கத்திலும், மனத்திலும் பிறழ்வுகள் கொண்டவர்களாகவே வாழ்கின்றனர். இப்பிறழ்வுகளின் காரணமாகப் பெண்கள் சமூகத்தில் அடைந்திருக்கும் சுதந்திரங்கள் மிகவும் மொசமான நிலையில் கொச்சைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான செயல்கள் பிம்பங்களின் மூலம் மாற்றப்படுகின்றன. எனவே திரைத்துறையில் இன்னும் ஆண்ஆதிக்கமாகத்தான் உள்ளது எனத் தெரிகிறது. இதனை மனுஷ்யபுத்திரனின் பார்வையில்

"பெண்கள் இன்று சமூகவெளியில் அடைந்திருக்கும் சுதந்திரங்கள் சிறுமைப்படுத்தப்பட்டு, கொச்சைப்படுத்தப்பட்டுப் புரிந்து கொள்ளப்படுகின்றனர்" இவ்வாறு நோக்கும் பொழுது பெண்களின் தன்மைகள் தவறாகவே புரியப்பட்டு வருகிறது என்பது தெளிவாகிறது. சான்றாக அன்றைய 'அவள் அப்படித்தான்' இன்றைய 'தரமணி' என்ற இம்மாதிரியான திரைப்படங்களின் மூலம் பெண்களைத் தவறாகப் புரிந்து கொள்ளும் தன்மையை உணரமுடிகிறது.

## நிழல், நிஜ எதார்த்தம்

தொலைக்காட்சி, விளம்பரம், திரைப்படம் இவ்வனைத்துமே காசு, பணம் சம்பாதிக்கும் நோக்கில்தான் பெண்களின் ஆபாசங்களையும், உணர்ச்சிகளையும் விற்கிறது. பலப்பல நிகழ்ச்சிகளைக் காணும் அனைவராலும் திரையிலும் தோன்றும் பெண்ணானவள் கேளிக்கைக்கு உள்ளாகிறாள். ஆணிடம் மட்டுமே பெண் அடிமையாகுவது மட்டுமல்ல. பெண்களிடமும் தனது செயல்திறனினால் அடிமையாகிறாள். எந்நிலையிலும் பெண்களின் உண்மைப் பிரச்சினைகளையோ

கேளிக்கைக் கலாச்சாரத்தையோ பிம்பங்கள் பொய்யாய்க் காட்டுகின்றன. பெண்களின் உண்மைத் தன்மையை, எவராலும் கண்டுகொள்ள முடியாது. பிம்பங்களின் முன் நடிப்பு வாழ்க்கையும் பிம்பங்களின் பின் நிஜவாழ்க்கையையும் வாழ்பவர்கள் திரையுலகப் பெண்கள். அதேபோல பெண்கள் அனைவரும் தன் மனதிற்குள் ஒரு பிம்பமும், வெளியில் ஒரு பிம்பமும் எனக் காட்சியளிக்கிறார்கள். இதனை,

“பெண்கள் பிம்பங்களால் ஆளப்படுகிறார்கள். பிம்பங்களாகவே நம்பவைக்கப்படுகிறார்கள். அது‘பாகுபலி’ தேவசேனாவாக இருக்கலாம். அல்லது ‘பிக்பாஸ்’ ஓவியாவாக இருக்கலாம். பெண்களின் நிஜங்கள் இந்த நிகழ்ச்சிகளில் ஒடுங்குகின்றன” (தடம் செப்.2017.:. ப.55) என்று குறிப்பிடுவதன் மூலம் பெண்களின் வாழ்வில் நிழலும் நிஜமும், இணைந்து அவர்களை நன்கு கூத்தாடச் செய்கின்றன. நிழலின் முன்னும் நிஜத்தின் முன்னும் பெண்ணானவள் மண்டியிட்டு கைக்கூப்பி நிற்கிறாள் என்பதை உணரமுடிகிறது.

**முடிவுரை**

படைப்பாளர்களின் பார்வையில் பெண்கள் என்றுமே ஒரு விடிவெள்ளியாகத்தான் உள்ளனர். சிலர் பெண்களை நேர்மறை எண்ணம் உடையவராகவும், பலர் எதிர்மறை எண்ணம் உடையவராகவுமே படைப்பர். அன்றைய எழுபது, எண்பது காலகட்டங்களில் அவர்கள் அனு (சுஜாதா), அவள் அப்படித்தான் (ஸ்ரீபிரியா),சில நேரங்களில் சில மனிதர்கள் (லட்சுமி), கல்யாண அகதிகள் (சரிதா), தண்ணீர் தண்ணீர் (சரிதா) இவ்வாறான பெண்கள் மக்கள் அனைவராலும் விரும்பப்படுவார்களாக திரைநிழலில் வந்துபோனவர்கள். அதேபோல மனுஷ்யபுத்திரனின் பார்வையில் லட்சுமி ராமகிருஷ்ணன், “பிக்பாஸ்”ஓவியா, அவள் அப்படித்தான் (ஸ்ரீ பிரியா – மஞ்சு கதாபாத்திரம்) , தரமணி (ஆண்ரியா) போன்ற நிகழ்ச்சி, திரைப்படங்களின் மூலம் பெண்கள் நிழல், நிஜ வாழ்க்கை என்ற இரண்டிலும் இறைவன் ஆட்டுவிக்கும் பொம்மைகளாகவே வாழ்கின்றனர் என்பதை உறுதிபடுத்துகிறது.




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்